ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

(இங்கிலீஷ் ஓடம் என்கிற)

# காலேஜி ஓடம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமைந்து

மதராஸ். என். ஸி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். ஸி.

110

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, வோஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும், அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்கியார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பபடும்.


தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோல்டன் பிரஸ், தூளை போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



இங்கிலீஷ் ஓடம் அல்லது,

# காலேஜி ஓடம்.

இங்கிலீஷ்காரர்கள் செய்தசட்டம்
நல்லடவுனை கும்பகோணம்
அக்சரையாய்ப் பாடம்சொல்லும்
அறிவுள்ள மாஸ்டர்களும்
அக்கரையாய்ப் பாடம்சொல்லும்
அநேகம்பேர் பிள்ளைகளாம்.

சருர்.

கல்கோட்டைக்கொப்பான கட்டடங்கட்டி காலேஜி ஸ்கூலென்னும் நோட்டீசும் ஒட்டி கணங்கொண்ட ஜில்லாக்கள் தனியென்றமக்கு காசினியில்கீர்த்திவரும் கண

மானபிள்ளைகள் பலருமேகூடி கல்விமிகும் காலேஜி ஸ்கூல்தனில் சென்று திட்டமாய் ரிக்கார்ட்டுபேர் தாக்கல் செய்து மதுரை திருநெல்வேலி திருச்சினாப்பள்ளி கரூர் சேலம் கோயம்புத்தூர் மற்றஜில்லாக்கள் மேலான செட்டியார் மகாலிங்கம்கிளப்பில் மாதம்-க-க்கு ஆறரை ரூபாய் ரெடியாகத்தான்கொடுத்தான் கொடுத்து சௌக்கியமுடன் உண்ணுன் சொகுசாக தான்கொடுத்து சுகமாக உண்ணுன் மற்றசிலபேர்களும் மாசம் க-க்குரூபா ஐந்தரையும் ரொக்கமாய் கொடுத்து.பனிரண்டுமணிநேரம் ராமாருபோக ஆறரைமணி வரையில் ஆனந்தமாய் தூங்கி அவர் அவர்கள் தங்கள் படுக்கைவிட் டெழுந்து வேடிக்கையாகவே வாக்கிங்குக்குப்போக பல்லுவாய்முதலானதுகளை சுத்திகள் செய்து பணிக்கான ஜோடுகள் காலுக்குமாட்டி மல்யெடுத்துதலைமேலே மூடியாய்கட்டி பின்குஞ்சும் முன்குஞ்சும் நீளமாய்தொங்க கைபிரம்பு புஸ்தகம் கைதனில் கொண்டு கம்ட்டு ஸ்கூலென்று கைகூர்த்துக்கொண்டு ரெதிரவர் தங்கள் சிநேகிதரைக்கண்டு குட்மார்னிங்யென்றுசொல்லி கையெடுத்து தூக்கி அவர்களும்இவர்களும்கூடவேசென்று ஏழரைமணிவரையில் உலாவித்திரிந்து எட்டுமணி யடிக்கவே வீடுதனில்வந்து

காப்பி டீ முதலான பானங்கள்செய்து சம்பங்கி முதலான தயிலங்கள் தடவி வயணமாய் வழிதனில் வாரிமுடித்து வரிசைதப்பாமலே காவேரிசென்று ஒன்பதுமணி வரையில் நீந்திவிளையாடி சிநேகிதர்கள் யெல்லோரும் ஜாகைக்கிநாடி சந்தனம் நல்சாந்து புனுகு சவ்வாது குறிப்பானநெத்தியில் குறிப்பாகவைத்து புன்சிரிப்புடனே பூரணமாய் உண்டு படிக்கப்பட்ட புஸ்தகம் கைதனில் கொண்டுபோகிற வழிதூரம் வாசித்துக்கொண்டு மறந்ததொரு பாடத்தை மற்றவரைக்கேட்டு மனவேகமாகவே காவேரிதாண்டி ஸ்கூலுக்குள் வெளியே கம்பினிகள்கூடி சிலபேர்கள் கும்பலாய் கூடியேபேச சிலபேர்கள் அவரவர்கள் தனித்தனியேபடிக்க சிலபேர்கள் மறவாக மாங்காயடிக்க இவ்விதமாகவே கூடிவிளையாடி பத்துமணியடிக்கவே பாடசாலை சென்று பணிக்கான பெஞ்சிமேல் எல்லோருமிருந்து சீரானபெஞ்சுமேல் சொகுசாக இருந்துபோனவுடன் மாஸ்டர்கள் பாடம்தொடங்க பாடம் தொடங்கவே பாடம் ஒப்பிவிக்க சிலபேர்கள் பாடங்கள்சரியால் ஒப்பிவிக்க சிலபேர்கள் பாடங்கள் தெரியா

மல் தவிக்க அட்சணமாகவே மாஸ்டர்கள் கோபித்துக் கொள்ள கெட்டப்பாந்தி பெஞ்சி யென்று மாஸ்டர்கள் சொல்ல ஓய் சார் பென்று வீண்வாதம் பேசி வீண்வாதம்பேசவே வெறுப்பு முண்டாகி ஒருவர்க் கொருவர் சங்கீதஞ்செய்து கோ அவுட்டென்று ஸ்கூலுக்கு வெளியேதள்ளி உ-மணிநேரம் முடிந்துபோன பிற்பாடு தத்தியோதனம் புளியோரை வடை வத்தலுடனே ஊறுகாய் வகைகளை உருசியாகஉண்டு சாப்பாடு ஆனவுடன் மறுபடியுஞ்சென்று போனவுடன் மாஸ்டர்கள் பாடம்தொடங்க பாடந்தொடங்கவே பாடம்ஒப்பிவிக்க நாலரைமணி அடிக்கவே பெல்லோரும் திரும்ப ஐந்துமணி அடிக்கவே யெல்லோரும் திரும்ப சிலபேர்கள் அவரவர்கள் ஜாகைக்குப்போக சிலபேர்கள் மறைவாக கிரிகட்பாலடிக்க அவுட்டென்றும் ரென்யென்றும் ஓவென்றுஞ்சொல்ல இவ்விதமாகவே கூடிபேபேச வீட்டுக்குப் போகிற வழியிலே தாங்கள் வேடிக்கையாகவே பேசிக்கொள்ளுவார்கள் டில்ராங்பூக்கிவிட்டிராங் கென்றும் வாட்டீஸ்யுவர்மார்க் ஆன்சர்மியென்றும் ஓயெல்லமைமார்க்கு நூ௰-

தர்ட்டியென்றும் இவ்விதமாகவேகூடிவிளையாடி ஆறரை மணி அடிக்கவே வீடுதனிற் சென்று அரைமணிநேரம் அனுஷ்டானஞ்செய்து ஏழுமணி அடிக்கவே கிளப்புதனில் உண்டு பன்னிரண்டுமணியடிக்கவே படுக்கைககுப் போவாராம் ஏலேலோ ஏலிலலோ.

காலேஜியின் ஏலப்பாட்டு

முற்றிற்று.

கடவுள் துணை.

ஜெகன்மோகன சாப்புதாளம்

பல்லவி

சாமிநீ வாடா இப்போதே

அநுபல்லவி.

சாமிநீவாடா சமயமிதுவே
சமயமிதுவே

காமனம்புப்பட்டு களைக்குதிப்போதே
சாமிஎன்னுலிப்போ சகிக்கப்போகாதே (சாமி)

இந்தநல்லவனத்திற்கும் இளந்தென்றல்சாற்றுக்கென்
சிந்தைகளிகூற வெந்தனைச்சேரும் (சாமி)

இக்கணம்கொக்கோக லக்கப்படியே
பக்குவமாயென்னை சிக்கிவிட்டானே (சாமி)

கீர்த்தனைகள்

முற்றிற்று.